**MCOP. No. 5186/2018** **DATE:**15.12.2025

Deposition of Witness : R.W.1

Name : Mr.Kamalakkanan

Father/Husband Name : Mr.Balasundaram

Age :35

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 15th day of December 2025.

---

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய தரப்பில் 4 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவை Authorization Letter எமசாஆ 1 ஆகவும், Policy of Insurance எமசாஆ 2 ஆகவும், MVI Report எமசாஆ 3 ஆகவும், Legal Notice sent to Owner and Driver along with the postal receipts, Return cover and Ack Card எமசாஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.

**3வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஓட்டுநரை நீங்கள் விசாரித்தீர்களா என்றால் நான் நேரிடையாக விசாரிக்கவில்லை எங்கள் நிறுவனத்தின் கள ஆய்வாளர் விசாரித்தார். அவர் விசாரணையில் சம்பவ இடத்தில் சைக்கிள் மற்றும் இருசக்கரவாகனம் மற்றும் விபத்தில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் போலிரோ டிரக் வாகனம் இருந்ததால் எங்கள் வாகனம் இடித்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்திற்கும் எங்கள் வாகனத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று ஓட்டுநர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். விபத்து தேதியில் மேற்படி வாகனம் யாருடைய பெயரில் இருந்தது என்றால் 3ம் எதிர்மனுதாரர் பாஸ்கரன் பெயரில் இருந்தது. 13.01.2023 ல் தான் TN 19 K 8150 என்ற டிரக் வாகனம் 3ம் எதிர்மனுதாரர் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்தில் டிரக் தான் சம்மந்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமாக எந்த வாகனத்தின் மீது முதல் தகவல் அறிக்கை(மசாஆ 1) தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் TN 19 K 8150 என்ற டிரக் வாகனத்தின் மீூது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் விபத்தை ஏற்ப்படுத்திய ஓட்டுநர் பெயர்குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமாக TN 19 K 8150 என்ற டிரக் வாகனத்தின் ஓட்டுநர் அருண்குமார் மீது தான் குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்து சமபந்தமாக ஓட்டுநர் அருண்குமாரோ, காப்பீடு நிறுவனமோ இந்த விபத்தை மறுத்து தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் காப்பீடு நிறுவனம் கொடுக்கவில்லை. விபத்து காலத்தில் டிரக்கின் வாகன பதவெண் TN 19 K 8150 உங்களுடைய காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட காப்பீட்டு சான்றிதழ் எமசாஆ 2 என்றால் சரிதான். விபத்தினால் பாதிக்கப்பட்ட நபர் மூன்றாம் நபர் என்றால் சரிதான். 1 மற்றும் 3ம்எதிர்மனுதாரர் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் 2ம்எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு நிலுயையில் இருந்ததா என்றால் ஆமாம், விபத்திற்கு 1 மற்றும் 3ம்எதிர்மனுதாரர் டிரக் ஓட்டுநரின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும் காரணம் என்பதால் 1மற்றும் 3ம்எதிரமனுதாரர் சார்பாக 2ம்எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனம் தான் மனுதாரர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை–</u>** இல்லை.

x

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:15.12.2025

**Sd/- R.Jagadeesan**
3 ஆம் நீதிபதி
சிறுவழக்குகள் நீதிமன்றம்.